# விளையாட்டு அமைச்சு

## தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்

**தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம் 1979 ஆம் ஆண்டிலிருந்து விளையாட்டுக் கல்வித்துறையில் பாடநெறிகளை நடாத்தும் முதன்மை நிறுவனமாகும்**

# விளையாட்டுக் கல்விப் பாடநெறிகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரல் - 2018

## பயிற்றுவிப்பாளர் உயர் பாடநெறி - பூப்பந்தாட்டம்

விளையாட்டுத் துறையில் அனுபவமுடைய பூப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக நவீன தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இப்பாடநெறி இடம்பெறும்.

**பாநெறியின் காலப்பகுதி :** 06 மாதங்கள் (03 மாதங்கள் கோட்பாட்டு ரீதியிலான மற்றும் செயன்முறைப் பாடநெறிக் காலப்பகுதியினையும் அத்துடன் 03 மாதங்கள் ஆய்வுக் காலப்பகுதியொன்றும் உள்ளடக்கப்படுவதுடன் கிழமை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாநெறியின் ஊடக மொழி :** சிங்களம் / ஆங்கிலம்

**பாநெறிக் கட்டணம் : ரூபா.** 40, 000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் தேசிய பாடசலைகள், பாடசாலைச் சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்படும் வலய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணியொன்றின் பயிற்றுவிப்பாளராகவிருத்தல்.

அல்லது

2. 03 வருடங்கள் (கல்வியியற் கல்லூரி) உடற்கல்வி டிப்ளோமாப் பாடநெறியில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் தேசிய பாடசலைகள், பாடசாலைச் சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்படும் வலய மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணியொன்றின் பயிற்றுவிப்பாளராகவிருத்தல்.

அல்லது

3. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் தேசிய பூப்பந்தாட்டம் பயிற்சிப் பாடநெறி படிமுறை - 01 இல் சித்தியடைந்திருத்தல் அத்துடன் தேசிய அல்லது சர்வதேச கனிட்ட அணியினைப் பிரதிநிதித்துவப்படுத்திய வீரராதல் அத்துடன் தேசிய / தேசிய கனிட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய பயிற்றுவிப்பாளராகவிருத்தல்.

அல்லது

4. க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் விளையாட்டு டிப்ளோமாவொன்றில் (03 மாதங்களுக்குக் குறையாத) சித்தியடைந்திருத்தல் அத்துடன் விளையாட்டு அமைச்சில், தேசிய சங்கம் ஒன்றின் மூலம் நடாத்தப்படும் மாகாண மட்டப் போட்டியொன்றினை பிரதிநிதித்துவப்படுத்திய வீரராதல் அத்துடன் மாகாண மட்ட விளையாட்டு அணியொன்றின் பயிற்றுவிப்பாளராக வெற்றியீட்டியிருத்தல்.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 235**

## விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை I

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக சரியான தொழில்நுட்ப அறிவினை வழங்கும் நோக்கில் **வொலிபோல், கயிறிழுத்தல், ஓட்டப்பாதை மற்றும் விளையாட்டு மைதானம் அமைத்தல்** என்பனவற்றிற்கு ஏற்புடைய பாடநெறிகள் நடாத்தப்படும்.

**பாநெறியின் காலப்பகுதி :** 60 மணித்தியாலங்களாகும். (கிழமையொன்றிற்கு 02 நாட்கள் வீதம் வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாநெறியின் ஊடக மொழி :** சிங்களம் / ஆங்கிலம்

**பாநெறிக் கட்டணம் :ரூபா.** 7, 000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக்கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. திறந்த மட்டமாயின் மாவட்டத்தில் முதலாம், இரண்டாம் அல்லது மாகாண, தேசிய போட்டிகளாயின் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடங்ளைப்பெற்ற வீர வீராங்னைகளை அல்லது அணிகளைப் பயிற்றுவித்திருத்தல்.

அல்லது

2. பாடசாலை மட்டமாயின் வலய மட்டத்தில் முதலாம், இரண்டாம் அல்லது மாகாண, தேசிய போட்டிகளாயின் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடங்ளைப்பெற்ற வீர வீராங்னைகளை அல்லது அணிகளைப் பயிற்றுவித்திருத்தல்.

- **ஓட்டப்பாதை மற்றும் விளையாட்டு நிலம் அமைத்தல் பாடநெறி** தொடர்பாக ஏற்புடைய விண்ணப்பதாரி விளையாட்டுத் துறையில் 05 வருட சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமாக அமைவதுடன் விளையாட்டு நிலப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திசெய்தல் செயற்பாடுகளில் ஈடுபடும் உத்தியோகத்தராகவிருத்தல்.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 204**
**0113119823**

## விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை II

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் தொடர்பாக சரியான தொழில்நுட்ப அறிவினை மேலும் வழங்கும் முன்நோக்கிய கட்டமொன்றாக **வூசு, கூடைப்பந்தாட்டம் மற்றும் பாரந்தூக்கல்** ஆகிய விளையாட்டுத் துறைகளுக்கு ஏற்புடைய பாடநெறிகள் நடாத்தப்படும்.

**பாநெறியின் காலப்பகுதி :** 120 மணித்தியாலங்களாகும். (கிழமையொன்றிற்கு 02 நாட்கள் வீதம் - வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாநெறியின் ஊடக மொழி :** சிங்களம் / ஆங்கிலம்

**பாநெறிக் கட்டணம் :ரூபா.** 10, 000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. விளையாட்டு விஞ்ஞான சான்றிதழ் பாடநெறி - படிமுறை I பாடநெறியில் (வூசு, கூடைப்பந்தாட்டம் மற்றும் பாரந்தூக்கல்) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

2. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் வழங்கப்படும் விளையாட்டு டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்திருத்தல்.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 204**
**0113119823**

## விளையாட்டு டிப்ளோமா பாடநெறி

பாராளுமன்ற சட்டமொன்றின் வாயிலாக தாபிக்கப்பட்டுள்ள மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ள NVQ 05 மட்டம் கொண்ட ஒரேயொரு விளையாட்டு டிப்ளோமா பாடநெறி தொடர்பாக விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

**பாநெறியின் காலப்பகுதி:** பன்னிரெண்டு மாதங்களாகும். (முழு நேர பாட நெறியாகும்).

**பாநெறியின் ஊடக மொழி :** சிங்களம் / ஆங்கிலம்

**பாநெறிக் கட்டணம் :** ரூபா. 60, 000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளப்படும் வயதெல்லை:** வயது 18 - 35 வருடங்கள் (அரசாங்க சேவையில் ஈடுபட்டிருப்போரின் வயது 45 வருடங்களை விடக் கூடுதல் ஆகாது).

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. கல்விப் பொதுத் தராதரப் பத்திரம் (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி மற்றும் கணிதம் / எண் கணிதம் உள்ளடங்களாக இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 06 பாடங்களில் 03 திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

2. ஏற்றுக் கொள்ளப்பட்ட விளையாட்டு அல்லது உடற்கல்வி தொடர்பான கல்லூரி ஒன்றில் ஆகக் குறைந்தது 06 மாத பாடநெறியொன்றினை வெற்றிகரமாக பயின்று பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

3. முப்படைகள், பொலிஸ் அல்லது சிவில் பாதுகாப்புப் பிரிவின் பயிற்றுவிக்கும் நிறுவனம் ஒன்றில், கல்லூரி ஒன்றில் உடற்கல்வி ஆலோசகராக 06 மாதங்களுக்குக் குறையாத அடிப்படை மற்றும் உயர் பாடநெறியொன்றினை வெற்றிகரமாக பயின்று பூரணப்படுத்தியிருத்தல்.

அல்லது

4. பாடசாலை விளையாட்டு ஆசிரியராக அல்லது ஆசிரியையாக அல்லது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றில் விளையாட்டு நில ஆலோசகர் ஒருவராக ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்துடன் விளையாட்டுத்துறையில் விசேட ஆற்றல்களை வெளிக்காட்டியிருத்தல்.

அல்லது

5. யாதேனும் விளையாட்டு தொடர்பாக தேசிய விளையாட்டு அணியொன்றின் அங்கத்தவராக இருக்க வேண்டியதுடன் யாதேனும் சர்வதேசப் போட்டியொன்றிற்குப் பங்குபற்றியிருத்தல்.

அல்லது

6. விளையாட்டு அமைச்சின் வாயிலாக நடாத்தப்படுகின்ற தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்டமட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தினைப் பெற்றிருத்தல். அவ்வாறு இல்லாவிடின் தேசிய விளையாட்டுச் சங்கம் ஒன்றினால் நடாத்தப்படும் தேசிய மட்டப் போட்டியொன்றில் முதலாம், இரண்டாம் அல்லது மூன்றாம் இடத்தினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு :** அரச, மாகாண சபைகள் மற்றும் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்புடைய திணைக்கள/நிறுவன தலைவர்களின் வாயிலாக அனுப்பப்படுதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 232 / 233**

## பயிற்றுவிப்பாளர் ஆற்றுகை அபிவிருத்திப் பாடநெறி

இலங்கையில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் விளையாட்டு அறிவினையும் புலமையினையும் அபிவிருத்தி செய்யும் நோக்கில் மேற்படி பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன் **மேசைப்பந்தாட்டம், கிரிக்கட், பாரந்தூக்கல் மற்றும் ஜிம்நாஸ்டிக்** ஆகிய விளையாட்டுக்கள் தொடர்பாகவான பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பாநெறியின் காலப்பகுதி :** 03 மாதங்கள் (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாநெறியின் ஊடக மொழி :** சிங்களம் / ஆங்கிலம்

**பாநெறிக் கட்டணம் : ரூபா.** 8, 000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளுவதற்கான தகைமைகள் :**

1. பயிற்றுவிக்கப்படும் விளையாட்டிற்கு ஏற்புடையதான படிமுறைப் பாடநெறி ஒன்றினைப் பூரணப்படுத்தியிருத்தல்.
2. பயிற்றுவிப்பாளராக 05 வருட அனுபவம்.
3. சர்வதேச/தேசிய/மாகாண/மாவட்ட மட்ட வெற்றிகளைப்பெற்ற வீரர்களைப் பயிற்றுவித்திருத்தல்.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 236**

## விளையாட்டு உபாதைகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

விளையாட்டு வீரர்கள் விளையாட்டு உபாதைகளைத் தவிர்த்துக்கொள்ளுதல் மற்றும் விளையாட்டு உபாதைகளை முகாமைத்துவம் செய்தல் தொடர்பாக அடிப்படை அறிவினை வழங்கும் நோக்கில் இப் பாடநெறியானது விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களின் பொருட்டு நடாத்தப்படுகின்றது.

**பாநெறியின் காலப்பகுதி :** 100 மணித்தியாலங்கள் (கிழமையொன்றிற்கு இரண்டு நாட்கள் வீதம் வியாழக்கிழமை மற்றும் வெளளிக்கிழமை நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை பாடநெறி இடம்பெறும்).

**பாநெறியின் ஊடக மொழி :** சிங்களம் / ஆங்கிலம்

**பாநெறிக் கட்டணம் : ரூபா.** 15, 000.00

**பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளுவதற்கான தகைமைகள் :**

விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக அல்லது உடற்றகவுநிலை ஆலோசகராக ஆகக் குறைந்தது 02 வருட அனுபவம் இருத்தல்.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 235**

## யோகக்கலைகள் மற்றும் இயற்கை சிகிச்சையியல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி

விளையாட்டு தொடர்பான அத்தியாவசியக் காரணிகளான வளையுந்தன்மை, சமநிலை ஆகியவற்றினை சிறப்பாக அபிவிருத்தி செய்யும் நுட்பமுறையாகவும் அவ்வாறே உள நெகிழுமையினை எளிதாக அண்மித்துத்தந்து உடற்றகமையினை நிரந்தரமாக அண்மித்துக்கொள்ளக் கூடிய முறைமையியல் ஒன்றாகவும் யோகக்கலைகள் மிக முக்கியமானவையாக அமைகின்றன. அவை ஆளுமை விருத்திக்கும் பக்கபலமானவையாகும். அதனுடன் தொடர்ச்சியான விடயம் ஒன்றாக இந்தியாவின் பிரபலமான இயற்கை சிகிச்சையியலையும் இப் பாடநெறியின் போது கற்பதற்கான வாய்ப்பு ஏற்படும். அதன் வாயிலாக முறையான மசாஜ் நுட்பமுறை மற்றும் இயற்கை முறைகள் பயன்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் சிகிச்சைகள் தொடர்பான கோட்பாட்டு ரீதியிலான அறிவு மற்றும் செயன்முறை பயிற்சியினையும் பெற்றுக்கொள்ளுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெறும்.

பாடநெறியின் பிரதான வளவாளர்கள், இந்தியாவின் யோகக்கலைகள் உள்ளடங்களாக பாரதத்தின் பாரம்பரிய விளையாட்டுக்கள் தொடர்பான முன்னோடி நிறுவனமான இந்தியாவின் அமராவதி பல்லைக்கழகத்துடன் இணைந்த ஸ்ரீஅனுமன் அப்பியாச பிரசாரக் மண்டல் பட்டம் வழங்கும் நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் தொழிற்படுவர்.

**பாநெறியின் காலப்பகுதி :** இரண்டு கிழமைகளாகும். (கிழமையொன்றில் வேலை நாட்களில் இடம்பெறும்).
**பாநெறியின் ஊடக மொழி :** ஆங்கிலம் (சிங்கள மொழியில் மொழிமாற்றம் வழங்கப்படும்).
**பாநெறிக் கட்டணம் :**ரூபா. 5, 000.00
**பாடநெறி தொடர்பாக சேர்த்துக் கொள்ளுவதற்கான தகைமைகள் :**

- யோகக்கலைகள் மற்றும் இந்திய சிகிச்சையியல் தொடர்பாக அக்கறையினைச் செலுத்து வோருக்கு.

**மேலதிக விபரங்கள் : பாடநெறி இணைப்பாளர் 0112684921 நீட்சி 225**

**குறிப்பு: இப் பாடநெறிகள் தொடர்பாகசேர்த்துக் கொள்ளும்போது கோரப்பட்டுள்ள தகமைகளுக்கு மேலதிகமாக சமர்ப்பிக்கப்படும் உயர் திறமைகள் மற்றும் விளையாட்டுக் கல்வித் தகமைகள் தொடர்பாக கூடுதலான முக்கியத்துவம் கிடைக்கப்பெறும்.**

## விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முறை

சகல பாடநெறிகள் தொடர்பாக விண்ணப்பப் படிவங்கள் www.niss.gov.lk இணையதளத்தில் அல்லது கிழமை நாட்களில் மு.ப. 9.00 இலிருந்து பி.ப. 4.00 மணி வரை தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். **பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 2018 பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07** எனும் முகவரிக்கு பதிவுத்தாளில் அனுப்புதல் வேண்டும்.

**குறிப்பு விண்ணப்பப் படிவங்களை அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறி/ விளையாட்டனைக் குறுப்பிடுதல் வேண்டும்.**

**பணிப்பாளர், தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்,**
**100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு 07.**
**தொலைபேசி : 0112 684 921 தொலைநகல் : 0112 674 033**
**இணையதளம் : www.niss.gov.lk**